**முதன்மை சார்பு நீதிமன்றம், மயிலாடுதுறை**
**முன்னிலை திருமதி. பி. சுதா, பி.காம்., பி.எல்.,**
**முதன்மை சார்பு நீதிபதி.**
**HMOP. No.158/2025**

ம.சா.1 தேதி. 02.03.2026.

| பெயர் | V.K. வசீகரன் | த/பெ. | வரதராஜன் |
|---|---|---|---|
| வயது | 23 | தொழில் | |
| கிராமம் | மயிலாடுதுறை | தாலுக்கா | |

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டு முதல் விசாரணை

நான் இந்த மனுவில் மனுதாரர் ஆவேன். எனது முதல் விசாரணை சங்கதிகளை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள விபரங்கள் எனக்கு தெரியும். அதிலுள்ள கையெழுத்து என்னுடையதுதான். அதில் உள்ள சங்கதிகள் நான் சொல்லி தான் தட்டச்சு செய்யப்பட்டது.

எனக்கும், எதிர்மனுதாரருக்கும் கடந்த 16.09.2024 நடந்த திருமணத்திற்கு அச்சிடப்பட்ட திருமண அழைப்பிதழ் அசல் **ம.சா.ஆ.1** ஆகவும், திருமணத்தின்போது எடுக்கப்பட்ட புகைப்படம் அசல் **ம.சா.ஆ.2** ஆகவும், 23.04.2025 தேதியிட்ட எதிர்மனுதாரருக்கு மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் அறிவிப்பு நகல் **ம.சா.ஆ.3** ஆகவும், 24.04.2025 எதிர்மனுதாரர் அறிவிப்பினை பெற்றுக்கொண்டதற்கான ஒப்புதல் அஞ்சல் அட்டை அசல் **ம.சா.ஆ.4** ஆகவும், மனுதாரர் தரப்பில் மயிலாடுதுறை காவல் நிலையத்தில் கொடுக்கப்பட்ட மனு ரசீது அசல் **ம.சா.ஆ.5** ஆகவும் மனுதாரர் ஆதார் அடையாள அட்டை (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது) நகல் **ம.சா.ஆ.6** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது. மனுப்படி உத்தரவாக வேண்டுகிறேன்.

**எதிர்மனுதார் தரப்பு குறுக்கு விசாரணை:-**

நானும் எதிர்மனுதாரரும் ஒரே ஊரைச்சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். நானும் எதிர்மனுதாரரும் ஒரே கல்லூரியில் படித்து வந்தோம் என்றால் சரிதான். எங்கள் திருமணம் காதல் திருமணம் என்றால் சரிதான். எதிர்மனுதாரரை நான் தான் முதலில் காதல் செய்ததாக கூறினேன் என்றால் சரிதான். எனது காதலை எதிர்மனுதாரர் ஏற்றுக்கொள்ளவில்லை என்றால் சரிதான். சிறிது நாட்கள் கழித்து எனது காதலை எதிர்மனுதாரர்

ஏற்றுக்கொண்டார் என்றால் சரிதான். நாங்கள் காதலித்தபோது இருவீட்டாருக்கும் விருப்பம் இல்லை என்று சொன்னால் சரிதான். வேலைக்கு செல்வதாகக்கூறி எதிர்மனுதாரரை அழைத்துக்கொண்டு சென்னைக்கு சென்றேன் என்றால் சரிதான். அங்கு தற்கொலை செய்துகொள்வதாகக்கூறி மிரட்டியதால் தான் எதிர்மனுதாரர் திருமணம் செய்தேன் என்று சொன்னால் சரியல்ல. விரும்பிதான் இருவரும் திருமணம் செய்துகொண்டோம்.

திருமணத்தை எங்கள் வீட்டாருக்கும் எதிர்மனுதாரர் வீட்டாருக்கும் சொல்லி தான் திருமணம் செய்தோம் என்று சொன்னால் சரிதான். எதிர்மனுதாரரின் சித்தி சென்னையிலிருந்து புறப்பட்டு ஊருக்கு வரச்சொன்னார்கள் அதனால் தான் ஊருக்கு வந்தோம் என்றால் சரிதான். ,இரு தரப்பு குடும்பத்தாரும் எங்களுக்கு திருமணம் செய்து வைப்பதாக ஒப்புக்கொண்டார்கள் என்றால் சரிதான். கடந்த 16.09.2024 அன்று எங்களுக்கு திருமணம் நடந்தது என்றால் சரிதான். திருமணத்திற்கு பிறகு நானும்எதிர்மனுதாரும் எங்கள் வீட்டில் வசித்து வந்தோம் என்றால் சரிதான். குறைந்த நாட்களில் எங்களுக்குள் கருத்து வேறுபாடு ஏற்பட்டது என்றால் சரிதான். தொடர்ந்து இருவருக்கும் இடையே சண்டை நடந்து வந்தது என்றால் சரிதான்.

திருமணத்திற்கு பிறகு நான் குடிப்பழக்கத்திற்கு அடிமையானேன் என்றால் சரியல்ல. இரவு 12.00, 01.00 மணி வாக்கில் வீட்டிற்கு வருவேன் என்றால் சரியல்ல. சண்டை அடிக்கடி ஏற்படும்போது எதிர்மனுதாரருக்கு சரியான உணவு, உடை மற்றும் பணம் கொடுப்பத்தில்லை என்று சொன்னால் சரியல்ல. 14.05.2025 ஆம் தேதி குடித்துவிட்டு வீட்டிற்கு வந்து எதிர்மனுதாரரிடம் சண்டை போட்டபோது சண்டை பெரிதாகி நான் எதிர்மனுதாரரை அடித்ததில் அவரது பல் உடைந்தது என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் என்னுடன் சேர்ந்து வாழ வேண்டும் என்பதால் காவல் நிலையத்தில் புகார் எதுவும் கொடுக்க வில்லை என்றால் சரிதான். சண்டை நடந்த அடுத்த நாளே வீட்டிலிருந்து பிரிந்து எதிர்மனுதாரர் சென்றுவிட்டார் என்றால் சரிதான். அதன் பின்னர் அவரது

புத்தகத்தினை எடுக்க அவரது அப்பாவுடன் வீட்டிற்கு வந்தார் என்றால் சரிதான். அப்போது எதிர்மனுதாரரின் அப்பா குடித்துவிட்டு எங்கள் வீட்டு கேட்டினை உடைத்துவிட்டு உள்ளே வந்து என்னை அடித்து, எதிர்மனுதாரர் எனது அம்மாவை அடித்து இருவரும் அடித்துக்கொண்டனர். நான் சொல்வதுபோல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்று சொன்னாலும், புத்தகம் எடுக்க வந்த எதிர்மனுதாரர் பொய்யாக புகார் கொடுத்துள்ளார் என்றாலும் சரியல்ல. நானும் எதிர்மனுதாரரும் எத்தனை வருடங்களாக பிரிந்து வாழ்ந்து வருகிறோம் என்றால் 6 மாதகாலம் பிரிந்து வாழ்ந்து வருகிறோம். எதிர்மனுதாரரை பிரிந்த பின்னர் நான் எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று சொன்னால் சரிதான். தொடர்ந்து பிரச்சனை செய்து வந்ததால் தான் எதிர்மனுதாரர் என்னுடன் சேர்ந்து வாழ விருப்பம் இல்லை என்று சொன்னால் சரிதான். நான் இந்த மனுவை பொய்யான தகவல்களைக் கூறி விவாகரத்து மனு தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

இத்திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல அதனை என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காண்பித்து அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

முதன்மை சார்பு நீதிபதி,
மயிலாடுதுறை.